முற்பகல் 10 00 திரு. வி. கே. கோதண்டராமன் : இப்படி போலீஸ் அதிகாரிகள் விசாரணைக்கு விட்டாலும் சரி, அல்லது கூட்டுறவு இலாகா அதிகாரிகளே அந்த விசாரணையை நடத்தினாலும் சரி. தொடர்ந்து வருடக் கணக்கில் இந்த வழக்குகள் நீடித்துக்கொண்டே போகிறதே ? நாங்களும் இதைப்பற்றி கேட்டுக்கொண்டிருக்கிறோம். அமைச்சர் அவர்களும் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து இப்படி வருடக் கணக்கில் நீடித்தால், அதை மூடி மறைக்கக்கூடிய அளவுக்குத் தான் இருக்கிறது என்று சொல்லக் கூடிய நிலைமை தான் ஏற்படும். ஆகவே, இதற்கெல்லாம் உடனடியாக பரிகாரம் தேடக்கூடிய அளவுக்கு, குறுகிய காலத்தில் விசாரணை செய்து முடித்துக்கொடுக்கக்கூடிய அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். சட்டம் வருவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தச் சட்டம் வெகு விரைவிலே வருமா? இது சம்பந்தமாக ஏதாவது உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, எந்தத் தவறு நடந்தாலும், அதை மூடி மறைப்பதற்கு நான் சம்மதிக்க மாட்டேன் என்ற உறுதியை உறுப்பினர் அவர்களுக்கு தெளிவாகவும், அழுத்தமாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். நடைமுறையில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை இந்த அமைச்சு உணர்கிறது. முதலில் அதிகாரிகள் விசாரணை நடத்தவேண்டும். அதற்கு பிறகு தணிக்கை அதிகாரிகள் பார்க்கவேண்டும். அதற்குப் பிறகு போலீசுக்குப் போகவேண்டும். அவர்கள் விசாரிக்கவேண்டும். அதற்குப் பிறகு வழக்கு தாக்கல் செய்யவேண்டும். தணிக்கை அதிகாரிகளின் கையிலிருந்து தாண்டுவதற்கே இரண்டு, மூன்று வருடங்கள் ஆகிவிடுகின்றன. நடைமுறையை துரிதப்படுத்துவதற்கும், தவறு செய்தவர்கள் மீது சீக்கிரம் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கும் தகுந்த முறையில் கூட்டுறவுத் துறையை ஒட்டிய போலீஸ் பிரிவை சற்று விரிவுபடுத்துவதற்கு செயற்குறிப்பு அரசாங்கத்தினிடம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) மதுரை தியாகராயர் பொறியியல் கல்லூரி மூடப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் . திருவாளர்கள் கருப்பையா, சுவாமிநாதன், சித்தன் ஆகிய மூன்று உறுப்பினர்களும் மதுரை தியாகராயர் பொறியியல் கல்லூரி மூடப்பட்டிருப்பது குறித்து விவாதிப்பதற்காக இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று ஓர் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். திரு. கருப்பையா அவர்கள் சுருக்கமாக விளக்கலாம்.

1970 செப்டம்பர் 2]

திரு. ஆர். கருப்பையா : கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு மதுரை தியாகராயர் என்ஜினியரிங் கல்லூரியை ஒரு சிறு காரணத்திற்காக நிர்வாகத்தினர் மூடிவிட்டார்கள். எதற்கெடுத்தாலும் கல்லூரியையோ, பல்கலைக்கழகத்தையோ மூடிவிடுவது என்பது சாதாரண காரியமல்ல. இப்படி கல்லூரியை மூடிவிடுவதினால், படிக்கின்ற மாணவர்கள் தங்களுடைய படிப்பை இழப்பதைவிட, பெற்றோர்களுக்கு பண இழப்பு தான் அதிகமாக இருக்கிறது. இது போன்ற நிலைகளில் கல்லூரியை மூடுவது என்பது மிகச் சாதாரணமான காரியமல்ல. மிக முக்கியமான காரியம். ஆகவே, இதைப் பற்றி விவாதிக்க சட்டமன்றத்தின் பிற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மதுரை தியாகராயர் பொறியியல் கல்லூரி இப்பொழுது மூடப்பட்டிருப்பதைப்பற்றி ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். அங்குள்ள விடுதிகளில் அந்தக் கல்லூரியை நிர்மாணம் செய்த திரு. கருமுத்து தியாகராஜ செட்டியார் அவர்கள் ஒரு கொள்கையை கடைப்பிடித்து வருகிறார்கள். மரக்கறி உணவைத் தான், தான் வைக்கிற கல்லூரி பள்ளி விடுதிகளில் வைக்கவேண்டும் என்ற கொள்கையை வைத்து, அதன் அடிப்படையில் தான் அவர்கள் தான் நிர்மாணம் செய்த கல்விச் சாலைகளை நடத்திக்கொண்டு வருகிறார்கள். நெடுங்காலமாக இந்தப் பொறியியல் கல்லூரியில் விடுதியில் புலால் உணவு வழங்கப்படாமல், மரக்கறி உணவு தான் வழங்கப்பட்டு வருகிற நிலைமை இருக்கிறது.

ஆண்டு தோறும் விடுதியில் புலால் உணவு தரப்படவேண்டும் என்று மாணவர்கள் கோரிக்கை வைப்பதும், அது மறுக்கப்படுவதுமான நிலை இருந்துகொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு புலால் உணவு வைக்க வேண்டுமென்று மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்து, ஒரு மாத காலம் கல்லூரி மூடப்பட்டிருந்து, மறுபடியும் திறக்கப்பட்டு, அப்பொழுதும் புலால் உணவு விடுதி திறக்கப்படவில்லை. இந்த ஆண்டும் புலால் உணவு விடுதி அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருந்தார்கள்.

இதுமட்டுமல்லாமல், அவர்கள் வேறு ஒரு கோரிக்கையையும் சேர்த்து இரண்டு கோரிக்கைகளை வைத்து வேலைநிறுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள். ஒரு கோரிக்கை என்னவென்றால், பி. ஈ. முதல் ஆண்டு பயின்றவர்களில் ஆங்கிலப் பரீட்சையில் தோல்வியுற்றவர்கள் மறு ஆண்டு திரும்பவும் தேர்வு எழுதும்பொழுது ஆங்கிலப் புத்தகம் மாறிவிட்டது. ஆகவே, புது புத்தகம் படித்து தாங்கள் மீண்டும் தேர்வு எழுதுவதானால் கடினமாக இருக்கும். சென்ற ஆண்டு இருந்த ஆங்கிலப் புத்தகத்தையே வைத்து, அதில் பரீட்சை எழுதும் வகையில் நிலைமையை மாற்றவேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்தார்கள். பல்கலைக்கழகத் துணைவேந்தர் அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அந்த மாணவர்களைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு படித்த அதே ஆங்கிலப் புத்தகத்தின் அடிப்படையில் ஆங்கில தேர்வு எழுதலாம் என்ற நிலைமையை ஏற்படுத்தினார். அதோடு அந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டுவிட்டது.

ஆனால், இரண்டாவதாக புலால் உணவு விடுதியில் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை சமர்ப்பித்தார்கள். அது மட்டு மல்ல. திடீரென்று ஒரு நாள் மாணவர்கள் ஆடு, கோழி எல்லாம் வாங்கிக்கொண்டு வந்து, அங்கு புலால் உணவு சமைத்துவிட்டார்கள். திரு. கருமுத்து தியாகராஜ செட்டியார் அவர்களுக்கு சினம் ஏற்படு வதற்கு இது காரணமாக இருந்ததாலும், வேலை நிறுத்தம் ஏற் பட்ட காரணத்தினாலும், கல்லூரியை மூடிவிட்டார்கள். அதற்குப் பிறகு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலையிட்டு, மாணவர்களின் பிரதிநிதிகளோடு பேசி, திரு. கருமுத்து தியாகராஜ செட்டியாருடனும் பேசி, ஒரு சமரச முடிவைக் கண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த குறிப்பிலிருந்து இன்று கல்லூரி திறக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது. மாணவர்களும் இதற்கு இசைவு தந்திருக் கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். நிபந்தனை என்னவென்றால் ஒரு மாத காலத்திற்குள் இந்தப் பிரச்னைக்கு எந்த வகையிலாவது தீர்வு கண்டு, மாணவர்களின் நோக்கம் நிறைவேறுவதற்கு ஏதேனும் ஒரு வழி காணவேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏதேனும் ஒரு வழி காணலாம் என்ற உறுதிமொழியை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் கல்லூரி திறக்கப்படக்கூடும் என்ற கருத்து அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு இந்தப் பிரச்னையைப் பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. ஆகவே, நிலைமை இந்த அளவோடு இருக்கிற காரணத்தினால் பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைத்து, இதைப் பற்றி விவாதிப்பதற்கு வேண்டிய அவசியமில்லை என்று கூறி இந்த அளவோடு நிறுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு பிறகு பேரவையின் பிற அலுவல்களை ஒற்றி வைத்து, இது பற்றி விவாதிக்கத் தேவையில்லை என்று நான் கருதுவதால், இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) ஹவுஸ் சர்ஜன்கள் வேலை நிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காங்கிரஸ் தரப்பில் திரு. ராம மூர்த்தி, திரு. மார்டின், திரு. சித்தன், திரு. சுவாமிநாதன் ஆகி யோர்களும், கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு) கட்சித் தரப்பில் திரு. வி. கே. கோதண்டராமன், சி. கோவிந்தராசன், திரு. கே. ஆர். ஞான சம்பந்தம், திரு. என். வரதராசன், ஆகியோர்களும், எஸ். எஸ். பி. தரப்பில் திரு. க. ர. நல்லசிவமும், சுதந்திரா கட்சி தரப்பில் டாக்டர் ஹாண்டே அவர்களும், ஆக 10 உறுப்பினர்கள் ஹவுஸ் சர்ஜன்கள் வேலை நிறுத்தம் சம்பந்தமாக, சட்டப்பேரவை விதி 42-ன் கீழ் இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைத்து, விவாதிக்க வேண்டும் என்று ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக் கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த ஹவுஸ் சர்ஜன்கள் ஸ்ட்ரைக்கைப் பொறுத்தவரையில், அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஸ்ட்ரைக் செய்திருக்கிறார்கள். இந்தக்